**கவனிக்க.-** *2014.11.21 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I: தொகுதி (III) மற்றும் பகுதி II ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1891 - 2014 නොවැම්බර් මස 28 වැනි සිකුරාදා - 2014.11.28

*1891 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) – பொது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | 1106 |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நாயகத்தின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 1107 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 1109 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2014, திசெம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டு மென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2014 இன் இல. 457*

*டி/960/கேடியூ.*

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அதிகாரவாணைக்கு நியமனம் செய்தல்*

*பின்வரும் பெயருடைய கெடெற் உத்தியோகத்தர் 2012, செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி முதல் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையில் இரண்டாம் லெப்டினன்ட் வரிசைப் பதவியில் அதிகாரவாணைக்கு நியமனம் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-*

*சி/58762 கெடெற் உத்தியோகத்தர் தொன் கவிந்து சேகரகே.*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கோடாபய ராஜபக்ஷ,*
*ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.*

*பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,*
*கொழும்பு,*
*2014, ஒற்றோபர் 30.*

*11-858*

---

*2014 இன் இல. 458*

*எம்ஓடி /டிஈஎவ்/02/01/ஈஎன்எல்/02/எல்சீடிரீ.*

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அதிகாரவாணைக்கு நியமனம் செய்தல்*

*பின்வரும் பெயருடைய பெண் கெடெற் உத்தியோகத்தர் 2014.06.21 ஆந் திகதி முதல் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையில் இரண்டாம் லெப்டினன்ட் வரிசைப் பதவியில் அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் அத்திகதி முதல் இலங்கைத் தரைப்படை பெண்கள் சிறப்பணிக்கு உள்ளிடுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-*

*சி/ 59198 பெண் கெடெற் உத்தியோகத்தர் இரத்நாயக முதியன்சேலாகே அநுபமா குமாரி இரத்நாயக, இலங்கை தரைப்படை பெண்கள் சிறப்பணி*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கோடாபய ராஜபக்ஷ,*
*ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.*

*பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,*
*கொழும்பு,*
*2014, ஒற்றோபர் 30.*

*11-945*

*2014 இன் இல. 459*

*எம்ஓடி/டிஈஎப்/07/01/ஏவீஎப்/ஆர்ஈரீ/437.*

**இலங்கை தரைப்படை - தொண்டர் படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்*

*பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2014, சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படை தொண்டர் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-*

*லெப்டினன்ட் பொல்கம்பொல முதியன்சேலாகே சேனாநாயக்க பண்டார, கரெ (உ/7742)*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கோடாபய ராஜபக்ஷ,*
*ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.*

*பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,*
*கொழும்பு,*
*2013, நவெம்பர் 03.*

*11-944*

---

*2014 இன் இல. 460*

*எம்ஓடி /டிஈஎவ்/10/03/சீஓஎம்/ஆர்ஏஎப்.*

**இலங்கை வான்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணைக்கு நியமனம் செய்தல்*

*பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர்கள் அவர்களது பெயர்களின் பின்னால் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளின் கீழ், பெயர்களுக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து இலங்கை வான் படையணியில் அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் அத்திகதி முதல் அவர்களது பெயர்களின் முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள சேவை கிளைகளுக்கு உள்ளடக்குதலும் அதியுத்தமராம் சனாதிபதி அவர்கள் களிப்புடன் அங்கீகரித்துள்ளார் :-*

*பிளைட் லெப்டினன்ட் தலதாவத்தகே அர்ஷன விமலகுண தலதாவத்த (03363) எ.பீ.கெ. - 2013.01.11*

*பிளைட் லெப்டினன்ட் எம்வில்ல வத்தே கெதர நிலுகா விலாஷினி (03364) எ.பீ.கெ.2013.01.11*

*பிளைட் லெப்டினன்ட் விதான ஆரச்சிகே பிரஷாட் தரங்க விதான ஆரச்சி (03365) எ.பீ.கெ. - 2013.01.11*

பிளைட் லெப்டினனன்ட் நாவுல்லகே கயான் ருவன் குமார நாவுல்லகே (03370) எட் வெட் – 2013.01.18

பிளையிங் உத்தியோகத்தர் சிரிவத்தன கங்கானம்கே சிந்தக ருவன் குமார (03366) எ.பீ.கெ. – 2013.01.11

பிளையிங் உத்தியோகத்தர் பிரவீன் திமந்த பெரேரா ஜயவர்தன (03367) எபீகெ – 2013.01.11

பிளையிங் உத்தியோகத்தர் பண்டாரநாயக்க முதியன்சேலாகே லக்ஷ்மன் சுகத் பண்டாரநாயக்க (03368) எ.பீ.கெ. – 2013.01.11

பிளையிங் உத்தியோகத்தர் ஹாதியல்தெனியே ரத்நாயக்க முதியன்சேலாகே துசித ரத்நாயக்க (03369) எ.பீ.கெ. – 2013.01.11

பிளையிங் உத்தியோகத்தர் லெவுனா பேதுரு சுரெஷ் ரகுநாத் (03371) வழங்கள் – 2013.01.18

பிளையிங் உத்தியோகத்தர் யொஹான் ரனில் துலஞ்ச விக்டோரியா (03372) வழங்கள் – 2013.01.18

பிளையிங் உத்தியோகத்தர் ஜயமான்ன மொஹொட்டிகே தொன் மனீச நெயோமால் துஷ்மந்த ஜயமான்ன (03373) வழங்கள் – 2013.01.18

பிளையிங் உத்தியோகத்தர் கவேஷ் நிமந்த பெத்தாவடு (03374) வழங்கள் – 2013.01.18

பிளையிங் உத்தியோகத்தர் லொகுஹிடிகே விமுக்தி மதுரங்க லொகுஹிடிகே (03375) மருத்துவம் – 2013.01.18

பைலட் உத்தியோகத்தர் குருலே கங்கானம்கே சமித இந்துல ஆரியதிலக (03376) தொ. இயந். – 2013.01.18

பைலட் உத்தியோகத்தர் ராஜபக்ஷ மொஹொட்டி முதியன்சேலாகே சத்துரங்க பண்டார அலுகொல்ல (03377) தொ. இயந். – 2013.01.18

பைலட் உத்தியோகத்தர் அமித் நிவங்க அமரசிங்க (03378) தொ. இயந். – 2013.01.18

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, மே 30.

11-719

---

# அரசாங்க அறிவித்தல்கள்

## இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார திருத்தச் சட்டத்தின் 10(3) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

### விலக்களிப்பு சான்றிதழ் வழங்கல்

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார திருத்தச் சட்டத்தின் 10(3) ஆம் பிரிவில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழுள்ள தரப்பினருக்கு மின்சார விநியோகத்தை மேற்கொள்வதற்கான அனுமதிப்பத்திரத்தின் விலக்களிப்பு சான்றிதழை வழங்குகின்றது.

| அனுமதிப் பத்திர இலக்கம் | அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பு | செல்லுபடியாகும் காலப்பகுதி | |
|---|---|---|---|
| | | ஆரம்பம் | முடிவு |
| EL/EX-D/14/ 06 | ஓரியன் சிட்டி லிமிட்டெட் | 26.09.2014 | 25.09.2019 |
| EL/EX-D/14/ 07 | கொழும்பு வை.எம்.பி.ஏ. | 26.09.2014 | 25.09.2019 |
| EL/EX-D/14/ 08 | நகர அபிவிருத்தி அதிகார சபை | 26.09.2014 | 25.09.2019 |

தலைவர்,
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு.

11-815

---

## நாராஹேன்பிட்டியிலுள்ள எழுதுகருவி வகைப் பிரிவு வருடாந்த தொகை சரிபார்ப்பதற்காக மூடப்படல்

2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த தொகை சரிபார்ப்பதற்காக நாராஹேன்பிட்டியிலுள்ள எழுது கருவி வகைப் பிரிவு 2014 ஆம் ஆண்டு திசெம்பர் 22 ஆந் திகதி முதல் 2015 ஆம் ஆண்டு சனவரி 19 ஆந்திகதி வரை மூடப்பட்டிருக்கும் என்பதனை உத்தியோகத்தர்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

மேலும் மேற்குறிப்பிட்ட பண்டகசாலையில் இருந்து தேவைப்படும் பொருட்களைப் பெறுவதற்கான விண்ணப்பம் கோரல் 2014, திசெம்பர் 16 ஆந் திகதிக்கு முன்பதாக அனுப்பப்படல் வேண்டும்.

அத்தியட்சகர் (வழங்கல்கள்)

அஞ்சல் திணைக்களம்,
நாராஹேன்பிட்டி,
கொழும்பு 0500.

11-933

## நிலஅளைவச் சபை

காணி, காணி அபிவிருத்தி அமைச்சு

2002 ஆம் ஆண்டிற்கான 17 ஆம் இலக்க நிலஅளவைச் சட்டத்தின் பிரிவு 47(1)(அ) இன் கீழ் பதிவு இரத்துச் செய்யப்பட்டுள்ள மற்றும் பிரிவு 47(1)(ஈ) இன் கீழ் வருடாந்த தொழில் புரியும் அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள நில அளவையாளர்களின் பெயர்ப் பட்டியல்

| | பதிவு இல. | முழுப் பெயர் | இடைநிறுத்தி/இரத்துச் செய்யப்பட்டுள்ள காலப்பகுதி |
|---|---|---|---|
| i. | 20040849 | சத்தம்பிரல்லாகே டொன் ஜோசெப் தயா அரசகுலரத்ன | 2014.08.14 முதல் பதிவு இரத்துச் செய்யப்பட்டுள்ளது. |
| ii. | 19901048 | ஜோசப் ரொஹாந்த அஜித் டி ஜக்கொலின் செனவிரத்ன | வருடாந்த தொழில் புரியும் அனுமதிப்பத்திரம் 2014.10.01 முதல் 2014.12.31 வரை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. |

பி. எம். பி. உதயகாந்த,
தலைவர்,
நிலஅளைவச் சபை.

கொழும்பு,
2014, நவெம்பர் 12.

11-835

---

## அம்பேவெல திட்டத்தின் பெரும்போக கூட்டறிக்கை - 2014/2015

வெலிமடை பிரதேச செயலகப் பிரிவின் அம்பேவெல திட்டத்தின் 2014/ 2015 ஆம் ஆண்டுக்கான பெரும் போகத்திற்கான கூட்டம் 2014.11.03 ஆந் திகதி ஹெவனகும்புர, அம்பேவெல நீர்ப்பாசன அலகு அலுவலகத்தில் நடைபெற்றதுடன் அதன்போது பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டது : -

1. பயிரிடப்படும் நிலப்பரப்பு - 940 ஏக்கர்;
2. பயிரின் வகை - நெல்/களப்புப் பயிர்;
3. கால்வாய் சுத்தம் செய்து முடித்தல் - 2014.11.30;
4. முதல் முறை நீர் விநியோகித்தல் - 2014.12.05;
5. நிலத்தை பண்படுத்தி முடித்தல் - 2014.12.05;
6. பயிரிட்டு முடிவடையும் திகதி - 2014.12.25;
7. இறுதியாக நீர் விநியோகத்தல் - 2015.04.30;
8. கால்வாய் சுத்தப்படுத்தாதவருக்கான தண்டப்பணம் - 10 மீற்றருக்கு ஒரு நாள் சம்பளம் 800 ரூபா;
9. போகத்தின்போது இரண்டாம் முறை கால்வாய் சுத்தம் செய்தல் - 2015, மார்ச் இரண்டாம் வாரம் ;
10. அறுவடை முடிவடையும் திகதி - 2015.05.15;
11. தேவையேற்படின் நீர்த்தட்டுப்பாடு ஏற்பட்டால் நீர் கட்டுப்பாட்டு முறை நடைமுறைப்படுத்தப்படும்.

11-722

---

## கந்தஎல திட்டத்தின் பெரும்போக கூட்டறிக்கை - 2014/2015

வெலிமடை பிரதேச செயலகப் பிரிவின் கந்தஎல திட்டத்தின் 2014/ 2015 ஆம் ஆண்டுக்கான பெரும் போகத்திற்கான கூட்டம் 2014.11.03 ஆந் திகதி கெப்பெடிபொல, கந்தஎல திட்ட அலகு அலுவலகத்தில் நடை பெற்றதுடன் அதன்போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு : -

1. பயிரிடப்படும் நிலப்பரப்பு - தீர்மானிக்கப்பட்ட ஏக்கர் அளவு;
2. பயிரின் வகை - நெல்/களப்புப் பயிர்;
3. கால்வாய் சுத்தம் செய்தல் - 2014.11.15ஆந் திகதிக்கு முன்;
4. முதல் முறை நீர் விநியோகித்தல் - 2014.12.01;
5. நிலத்தை பண்படுத்தல் - 2014.12.10 முதல் 2014.12.20 வரை ;
6. பயிரிட்டு முடிவடையும் திகதி - 2015.01.01;
7. இறுதியாக நீர் விநியோகத்தல் - 2015.04.30;
8. கால்வாய் சுத்தப்படுத்தாதவருக்கான தண்டப்பணம் - 1/4 ஏக்கருக்கு ஒரு நாள் சம்பளம் 850 ரூபா;
9. போகத்தின்போது இரண்டாம் முறை கால்வாய் சுத்தம் செய்தல் - 2015.02.20 ;
10. அறுவடை முடிவடையும் திகதி - 2015.05.15
11. குறித்த திகதியில் கால்வாய் சுத்தப்படுத்தாத விவசாயிகளுக்கான தண்டப்பணம் அறவீடானது நீர்ப்பாசன சட்டம் மற்றும் விவசாய சேவைகள் சட்டத்தின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும்.
12. நீர்ப்பாசன கால்வாய்களை சேதப்படுத்தும் நீருக்கு கழிவுகளை அகற்றுகின்ற மற்றும் நீர் விநியோக திட்டத்திற்கு அடிபணியாமல் செயற்படுகின்றவர்கள் தொடர்பில் சட்டப்படி நடவடிக்கை எடுத்தல் பொருத்தமானதென தீர்மானிக்கப்பட்டது.

11-723

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி

*1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

கிளை : கலஹா
வாடிக்கையாளரின் பெயர் :லேவிற்ற விதானலாகே மாதவ கீர்த்தி சுரஞ்சித் வேவிற்ற மறுபெயர் மாதவ கீர்த்தி சுரஞ்சித் வேவிற்ற

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

"வேவிற்ற விதானலாகே மாதவ கீர்த்தி சுரஞ்சித் வேவிற்ற மறுபெயர் மாதவ கீர்த்தி சுரஞ்சித் வேவிற்ற கடப்பாடு உடையவராகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ .எல்.சி. சார்பில், கண்டி பிரசித்த நொத்தாரிசு எம்.எஸ். பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதியிடப்பட்ட3340 ஆம் இலக்க முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2014 ஆம் ஆண்டு ஓகத்து 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மீது தொண்ணூற்று எட்டு இலட்சத்து நாற்பத்தையாயிரத்து எண்நூற்று அறுபத்தி இரண்டு ரூபா தொண்ணூறு சதம் (98,45,862.90) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும் அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி.பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட 3340 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனம் வளவுகளும் சொல்லப்பட்ட தொண்ணூற்று எட்டு இலட்சத்து நாற்பத்தையாயிரத்து எண்நூற்று அறுபத்தி இரண்டு ரூபா தொண்ணூறு சதம் (98,45,862.90) கொண்ட பணத்தொகையை 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை அதன் மீதான வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடு சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளா ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### மேலே குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்தில் உள்ள பரணகுரு கோரளவின் மாவத்த பற்றவில் உள்ள கேகாலை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கேகாலை நகர சபையின் எல்லைக்கு உட்பட்ட ரண்வெல- 51 கிராமசேவகர் பிரிவிற்கு உட்பட்ட ரண்வெல கிராமத்தில் உள்ள 617 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள மொரகஹாமுலஹேன மற்றும் பானவத்தஹேன என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் சி. குருகுலசூரியவினால் தயாரிக்கப்பட்ட 18.04.1997 ஆம் திகதியிடப்பட்ட பீ 2635 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 01 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக் கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு: வரைபட இலக்கம் பீ 2635 இல் உள்ள காணித்துண்டு 5என அடையாளம் இடப்பட்ட வீதி; கிழக்கு: வரைபட இலக்கம் பீ 2635 இல் உள்ள காணித் துண்டு 5 என அடையாளமிடப்பட்ட வீதி மற்றும் காணித்துண்டு 4; தெற்கு: தன்னபிற்றஹேன; மேற்கு: கொழும்பு கண்டி பிரதான வீதி அத்துடன் ஒரு றூட் மற்றும் ஆறு பேர்ச்சுக்கள் (0ஏ.1றூ.6 பே.) விஸ்தீரணமான ஆதனத்துடனான கட்டிடம் மற்றும் அத்துடன் எல்லாம் , கேகாலை மாவட்ட காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் ஏ 626/217 இன் கீழ் பதிவு செய்யப்பட்டது.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சி. குருகுலசூரியவினால் தயாரிக்கப்பட்ட 18.04.1997 ஆந் திகதியிடப்பட்ட பீ 2635 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 5 என அடையாளம் இடப்பட்டதற்கு அமைவான பாதை உரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே.ஏ.எல்.ரி.ரணவீர,
பி.பொ.மு.( சட்டம்) /சபைச் செயலாளர்.

11- 930

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

கிளை : ரிக்கிலகஸ்கட
வாடிக்கையாளரின் பெயர் : ராஜநாயக்க முதியான்சலாகே கோறள கெதர லலித் குமார ராஜநாயக

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

"ராஜநாயக்க முதியான்சலாகே கோறள கெதர லலித் குமார ராஜநாயக கடப்பாடு உடையதாகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ .எல்.சி. சார்பில், கண்டி பிரசித்த நொத்தாரிசு எம்.எஸ். பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதியிடப்பட்ட3595 மற்றும் 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதியிடப்பட்ட 3650 ஆகிய இலக்க முறிகள் மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2014 ஆம் ஆண்டு யூலை 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மீது ஒரு கோடியே முப்பத்தி யொரு இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து நூற்றுப்பதினொரு ரூபா இருபத்தொன்பது சதம் (1,31,57,111.29) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும் அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி.பணிப்பாளர்கள்

சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட 3595 மற்றும் 3650 ஆகிய இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ஒரு கோடியே முப்பத்தியொரு இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து நூற்றுப் பதினொரு ரூபா இருபத்தொன்பது சதம் (ரூ. 1,31,57,111.29) கொண்ட பணத்தொகையை 2014 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளா ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

### அட்டவணை

மத்திய மாகாணம், நுவரெலிய மாவட்டத்தில் உள்ள ஹங்குரான்கெத்த பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட உடஹேவாஹெற்றவின் கொஹோக கோரளவின் ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட ரிக்கில்லகஸ்கட 492 ஏ கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட ரிக்கில்லகஸ்கட தெனிக்கே மற்றும் உடமகுருப்பியில் உள்ள ரொன்ரொன் பெருந்தோட்ட பகிரப்பட்ட பகுதி என அழைக்கப்படும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் ரி.பி. அத்தநாயக்கவினால் தயாரிக்கப்பட்ட 28.09.1992 ஆந் திகதியிடப்பட்ட 3051 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாள மிடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு: பெருந்தோட்டத்திற்குச் செல்லும் வீதி; வடகிழக்கு: காணித்துண்டு 2; தென்மேற்கு: இந்தக் காணியின் மிகுதியான பகுதி அத்துடன் ஒரு றூட் (0ஏ.1றூ.0பேர்.) விஸ்தீரண மான காணியுடனான கட்டிடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம் , நுவரெலிய காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் ஆர் 258/266 இன் கீழ் பதிவு செய்யப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள காணி, அண்மையில் நில அளவை செய்யப்பட்டதன் விபரங்கள் பின்வருமாறு.-

(1) மத்திய மாகாணம், நுவரெலிய மாவட்டத்தில் உள்ள ஹங்குரான்கெத்த பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட உடஹேவாஹெற்றவின் கொஹோக கோரளவின் ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட ரிக்கில்லகஸ்கட 492 ஏ கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட ரிக்கில்லகஸ்கட தெனிக்கே மற்றும் உடமகுருப்பேயில் உள்ள ரொன்ரொன் பெருந்தோட்ட பகிரப்பட்ட பகுதி என அழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் ரி.பி. அத்தநாயக்கவினால் தயாரிக்கப்பட்ட 26.01.2011 ஆந் திகதியிடப்பட்ட 20/ 2011 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு: வீடுகளுக்குச் செல்லும் வீதி; கிழக்கு: ரொன்ரொன் பெருந்தோட்டம் ரி.பி. அத்தநாயக்கவின் 3051 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 2; தெற்கு: ரொன்ரொன் பெருந்தோட்டம், ஐ. கே. அபயரட்ன மற்றும் ஏனையவர்களால் உரிமை கோரப்படும் காணி; மேற்கு: ரொன்ரொன் பெருந்தோட்டம் பீ.கே. ராஜநாயக்கவினால் உரிமை கோரப்படும் காணி, முப்பத்தாறு தசம் ஆறு பேர்ச்சுக்கள் (0ஏ.0றூ.36.6பேர்.) விஸ்தீரணமான காணியுடனான கட்டிடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம்.

(2) மத்திய மாகாணம், நுவரெலிய மாவட்டத்தில் உள்ள ஹங்குரான்கெத்த பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட உடஹேவாஹெற்றவின் கொஹோக கோரளவின் ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட ரிக்கில்லகஸ்கட 492 ஏ கிராமசேவகர் பிரிவிற்கு உட்பட்ட ரிக்கில்லகஸ்கட தெனிக்கே மற்றும் உடமகுருப்பேயில் உள்ள ரொன்ரொன் பெருந்தோட்ட பகிரப்பட்ட பகுதி என அழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யு. ஏ. பியதாசவினால் தயாரிக்கப்பட்ட 07.03.1999 ஆந் திகதியிடப்பட்ட 142/3/99 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு: ரிகில்லகஸ்கடவிலிருந்து பிரதான வீதிக்கு செல்லும் வீதி; கிழக்கு: உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ரி.பி. அத்தநாயக்கவின் 7394ஏ ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 1 மற்றும் குழி; தெற்கு: உரிமம் பெற்ற நிலஅளவை யாளர் ரி.பி. அத்தநாயக்கவின் 7394 ஏ ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 2; மேற்கு: குழி மற்றும் ஒரு றூட் ஒன்பது பேர்ச்சுக்கள் (0ஏ.1றூ.9பே.) விஸ்தீரணமான காணியுடனான கட்டி டங்கள் மற்றும் அத்துடனான எல்லாம். நுவரெலிய மாவட்ட காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் ஆர் 333/117 இன் கீழ் பதிவு செய்யப் பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே.ஏ.எல்.ரி.ரணவீர,
பி.பொ.மு.( சட்டம்) /சபைச் செயலாளர்.

11- 929

---

### மக்கள் வங்கி - அலுவலக வங்கிப் பிரிவு

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழ் தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் 2013, ஒற்றோபர் 23 ஆந் திகதி நடைபெற்ற அவர்களின் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

"பதிவு எண். P.V. 9669 உடைய 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் முறையாக நிறுவப்பட்ட மற்றும் மொறட்டுவை பிரய்ஸர் மாவத்தை 16 ஆம் இலக்கம் இடத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தினுடனான நிறுவனமாவ தோடு மேசஸ் ஜயனந்த எசோசியேட் (பிறைவேட் லிமிட்டெட்) கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஐ. டி. எச். எல். பெரேராவினால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 2009, நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி 1619 ஆம் இலக்க ஈட்டுமுறிக்காக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எல். எம். நாரங்கொடவினால் எழுதி உறுதிப்படுத்திய 2006, மாச்சு மாதம் 28 ஆந் திகதிய 1068 ஆம் இலக்க ஈட்டுமுறிக்காக மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஏ. எஸ். டி. த சிரிசேனவினால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 2009, நவெம்பர் மாதம் 19 ஆந் திகதிய 405 ஆம் இலக்க ஈட்டுமுறிக்காக வருமதியாகவுள்ள பணம் செலுத்துவதை புறக்கணிக்கப்பட்டுள்ளதால் தற்போது இலங்கை ரூபாவில் 2,31,99,116.80 (இரண்டு கோடியே முப்பத்தொரு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து நூற்றுப் பதினாறு ரூபா எண்பது சதம்) பணம் அதன் ஈட்டுமுறிக்காக மேலதிக

வட்டியுடனும் மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் மீதியாகவும் கிடைப்பதற்கும் உள்ளது.

மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் மூலம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் இலக்கம் 1068, 1619 மற்றும் 465 உடைய ஈட்டு முறி மூலம் அந்த வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள நிலையான சொத்தை இலங்கை ரூ. 2,31,99,116.80 (இரண்டு கோடியே முப்பத்தொரு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து நூற்று பதினாறு ரூபா எண்பது சதம்) பணம் 2013, ஓகத்து 01 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை இலங்கை ரூபாவில் இரண்டு கோடியே பதினெட்டு இலட்சத்து இருபதாயிரத்து ஐநூற்று முப்பத்திரண்டு ரூபா எண்பத்துநான்கு சதம் (ரூ. 2,18,20,532.84) பணத்துக்காக வருடத்துக்கு நூற்றுக்கு இருபத்தைந்து (25%) வீதம் மேலதிக வட்டியும் அந்த மக்கள் வங்கியின் சட்டத்தின் 29எல் (29L) பந்தியின் கீழ் அளவிடக்கூடிய கட்டணம் மற்றும் பணமும் ஏதேனும் தொகை செலுத்தப்பட்டிருந்தால் அதனைக் குறைத்து அறவிட்டுக் கொள்வதற்கு கொழும்பு அதிகாரமளிக்கப்பட்ட ஏலவிற்பனையாளர் மேஸஸ் ஈ. எஸ். ராமநாயக்காவினால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்வதற்கு இத்தால் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.".

**முதலாம் அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி வலயம் பள்ளே பத்துவ தெஹிவல கல்கிசை மாநகர எல்லைக்குள் தெஹிவளையில் அமைந்துள்ள காலி வீதி, வரிமதிப்பீட்டு இலக்கம் 180, 182 மற்றும் 184 உடைய எபோதிகரிவத்தை எனும் இடத்துக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. டி. டி. குணதாசவினால் தயாரிக்கப்பட்ட 1993, ஒற்றோபர் 24 ஆந் திகதிய 47 ஆம் இலக்க நிலஅளவைப்படத்தில் காடடப்பட்டுள்ள லொட் 3013 என அடையாளப்படுத்தப்பட்டு பிரித்து வேறாக்கிய முழுமையான காணித்துண்டு அதனுள் அமைந்துள்ள கட்டிடம், செய்பயிர் அனைத்துமாக இலக்கம் 3013 உடைய துண்டுக்கு எல்லை - வடக்கு: லொட் 2482 மற்றும் 2747 உம் ; கிழக்கு : காலி வீதியும் ; தெற்கு : கிரகரிப் பிரதேசமும் மற்றும் ; மேற்கு : லொட் 2481 உம் ஆகிய எல்லைக்குள் அமைந்துள்ள மேலே இலக்கம் 47 உடைய நிலஅளவைப்படத்துக்கு அமைவாக பதினெட்டு தசம் ஆறு ஒன்று பேர்ச்சு (0ஏ. 0றூ. 18.61பே.) 0.047 ஹெக்டேயர் விசாலமான முழுமையான காணித்துண்டானதுடன் இது தெஹி 98/ 265 இன் கீழ் நுகேகொடை காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**இரண்டாவது அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி வலயம் பள்ளே பத்துவ மாநகர எல்லைக்குள் பன்சிகாவத்தை வாக்காளர் பிரிவில் 25 ஆம் இலக்க பன்சிகாவத்தை வீதி வரி மதிப்பீட்டு இலக்கம் 75, 77, 77A மற்றும் 77/ 1 உடைய கட்டிடம் செய்பயிர் மற்றும் சுற்றியுள்ள அனைத்துடனும் மெரென்னேகேவத்தை எனும் இடத்துக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வை. ஜீ. சந்திரசேனவினால் தயாரிக்கப்படட 2001, சனவரி 30 ஆந் திகதிய 2001/ 110 ஆம் இலக்க நிலஅளவைப்படத்தில் காட்டப்பட்டுள்ள லொட் "Q" என அடையாளப்படுத்தப்பட்டு பிரித்து வேறாக்கிய முழுமையான காணித்துண்டுக்கு எல்லை - வடக்கு : லொட் "P" உம்; கிழக்கு : பன்சிகாவத்தை வீதியும் ; தெற்கு : பன்சிகாவத்தை வீதி வரி மதிப்பீட்டு இலக்கம் 2001/110 உடைய சூழலும் ; மேற்கு : மொஹிதீன் மஸ்ஜித் வீதி வரிமதிப்பீட்டு இலக்கம் 08 "A" மற்றும் G 74 உடைய சுற்றுச் சூழலும் ஆகிய எல்லைகள் அமைந்துள்ள 2001/ 110 ஆம் இலக்க அந்த நிலஅளவைப்படத்துக்கு அமைவாக பதினைந்து தசம் எட்டு ஏழு பேர்ச் (0ஏ. 0றூ. 15.87பே) விசாலமான முழுமையான காணித் துண்டாகியதுடன் இது A 994/ 274 இன் கீழ் கொழும்பு காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மூன்றாம் அட்டவணை**

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், கொலன்ன வலயம் தியபொடகம் பத்துவ எம்பிலிபிட்டிய பல்லேகமவில் அமைந்துள்ள "கிரலவெல்கடுவ" எனும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஐ. கொடம்பகேயினால் தயாரிக்கப்பட்ட 2002, சனவரி 16 ஆந் திகதிய 1885 ஆம் இலக்க நிலஅளவைப் படத்தில் காட்டப்பட்டுள்ள லொட் "A" என அடையாளப்படுத்தப்பட்டு பிரித்து வேறாக்கிய முழுமையான காணித்துண்டுக்கு எல்லை காணியினுள் அமைந்துள்ள கட்டிடங்கள், செய்பயிர் மற்றும் எல்லாமாக அவை லொட் "A" காணித்துண்டுக்கு எல்லைகள் - வடக்கு : முனசிங்க ஆரச்சிகே எல்பட்டினால் உரிமைகோருகின்ற காணியும் ; கிழக்கு : மாதம்பையிலிருந்து நோனனகம வரை உள்ள வீதியும் ; தெற்கு : கொலன்கம கொரடுவேவத்தையும் மற்றும் ; மேற்கு : அபேவர்த்தன கமகே பீரிஸினால் உரிமை கோருகின்ற காணியும் ஆகிய எல்லைக்குள் அமைந்து இலக்கம் 1885 உடைய அந்த நிலஅளவைப்படத்துக்கு அமைவாக இரண்டு றூட் இருபத்து மூன்று பேர்ச்சுகள் (0ஏ. 2றூ. 23பே.) அல்லது ஹெக்டேயர் 0.26052 விசாலமான காணித்துண்டாவதோடு இது G 53/ 278 இன் கீழ் இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதம முகாமையாளர்,
அறவீடு.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
ஏஎன்சீஎல் கட்டிடம்,
கொழும்பு 10.
2013, ஓகத்து 07.

11-905

---

**பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க.**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பேன் ஏசியா வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(நுகேகொடை கிளை)
வாடிக்கையாளரின் பெயர் : மொஹமட் பவுசுடீன் முப்லிஹ்
ஆதனத்தின் முகவரி : 39, மஹிந்தாராம மாவத்தை, தெமட்டகொடை

2014, ஒற்றோபர் 24 ஆந் திகதியன்று நடைபெற்ற பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. இன் பணிப்பாளர்கள் சபை கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது :-

"கடப்பாடுடையவரான மொஹமட் பவுசுடீன் முப்லிஹ், பதிவு இல. பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம்

ப. வ. க. (இதனகத்துப்பின்னர் சிலவேளைகளில் "வங்கி" என அழைக்கப்படும்' இன் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். ஆர். ஹேவாதந்திரி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2012, மாச்சு 22 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 2324 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதாதலாலும் ;

வங்கியிற்கு சொல்லப்பட்ட ஈட்டு முறி இல. 2324 இன் மூலம் 2014, செத்தெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதி வரை ஒரு கோடியே நாற்பத்தேழு இலட்சத்து எண்பத்திரண்டாயிரத்து இருநூற்று இருபத்தாறு ரூபா இருபது சதம் (ரூ. 1,47,82,226.20) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு இருபத்துநான்கு சதவீத (24%) வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின் மீது ஒரு கோடியே நாற்பத்தேழு இலட்சத்து எண்பத்திரண்டாயிரத்து இருநூற்று இருபத்தாறு ரூபா இருபது சதம் (ரூ. 1,47,82,226.20) கொண்ட தொகை மற்றும் 2014, ஒகத்து 31 ஆந் திகதி வரையான வட்டியும் தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும்;

சொல்லப்பட்ட முறி மீது வரவேண்டிய சொல்லப்பட்ட தொகை ஒரு கோடியே நாற்பத்தேழு இலட்சத்து எண்பத்திரண்டாயிரத்து இருநூற்று இருபத்தாறு ரூபா இருபது சதம் (ரூ. 1,47,82,226.20) ஐ, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் அறவிடவேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரையான வட்டியுடனும்சேர்த்து (ஏதேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றைம் கழித்து) அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்ய, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கோட்டே, பெத்தகான வீதி, இல. 134 ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் பீ. கே. ஈ. சேனாபதி அவர்களுக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கிறதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.".

**அட்டவணை**

